# பிரெஞ்சு வேலைவாய்ப்பு முகாம்



▶ புதுச்சேரியில் நடந்த பிரெஞ்சு வேலைவாய்ப்பு முகாமை உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

**புதுச்சேரி, பிப். 16:** உழவர்கரை நகராட்சி மற்றும் நவயுகா கன்சல்டன்சி சர்வீசின் நகர வாழ்வாதார மையம் சார்பில் புதுச்சேரி சுய்ப்ரேன் வீதியிலுள்ள அலையன்ஸ் பிரான்சேயில் பிரெஞ்சு நிறுவனங்களான டாடா கன்சல்டன்சி சர்வீஸ், சோசித்தே ஜெனரல், சோப்ரா ஸ்டீரிய மற்றும் சைட்டல் போன்ற உலகின் தலைசிறந்த நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் நேற்று நடந்தது. உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி, நவயுகா கன்சல்டன்சி சர்வீஸ் மேலாண் இயக்குனர் மோகன்தாஸ் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற்ற இம்முகாமில் பட்டம் முடித்த பிரெஞ்சு மொழியில் ஏ2 முதல் பி2 அளவில் தேர்ச்சி பெற்ற 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் உலகின் தலைசிறந்த நிறுவனங்களில் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு, பிரெஞ்சு வங்கியின் கேஒய்சி, கடன் செயல்பாடு, பிரெஞ்சு உலகளாவிய சேவை மையம் போன்ற பல துறைகளில் வேலை செய்ய முன் அனுபவம் உள்ள, அனுபவம் இல்லாத பட்டம் பெற்ற பிரெஞ்சு மொழி நன்கு பேச எழுத தெரிந்த நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் தெரிவு செய்யப்பட்ட அனைவரும் சென்னை, பெங்களூரு, நொய்டா போன்ற நகரங்களில் அவரவர் திறமை மற்றும் முன் அனுபவத்துக்கு ஏற்ப மாதம் ரூ.20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையில் சம்பளத்தில் பணியமர்த்தப்படுவர் என தெரிவிக்கப்பட்டது.

தினமலர்
புதுச்சேரி | ஞாயிறு | 16.2.2020



# வி.ஏ.ஓ., அலுவலகம் திறப்பு



காலாப்பட்டு தொகுதி ஆலங்குப்பத்தில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தை அமைச்சர் ஷாஜகான் திறந்து வைத்தார். அருகில் சப்கலெக்டர் சுதாகர், உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி.

**புதுச்சேரி, பிப். 16–** ஆலங்குப்பத்தில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், சந்தைப்படுத்துதல் மையத்தை அமைச்சர் ஷாஜகான் திறந்து வைத்தார்.

காலாப்பட்டு தொகுதி, ஆலங்குப்பம், சஞ்சீவி நகர் பயன்பெறும் வகையில் புதிதாக கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் கட்டப்பட்டது.

உழவர்கரை நகராட்சியின் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம், அனைத்து கைவினை பொருட்கள் உற்பத்தியாளருக்கான சந்தைப்படுத்துதல் மையம் அமைக்கப்பட்டது.

வருவாய்த்துறை அமைச்சர் ஷாஜகான் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மற்றும் சந்தைப் படுத்துதல் மையத்தை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் சப்கலெக்டர் சுதாகர், உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி, தாசில்தார் குமரன், துணை தாசில்தார் உலகநாதன், திட்ட அதிகாரி கருணாநிதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.